REGD: No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஓர் அணா

இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 195

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு ரூ. 24—0—0

6 மாதம் ரூ. 12—0—0

3 மாதம் ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு ரூ. 30—0—0

6 மாதம் ரூ. 15—0—0

3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: தைமீ 15உ வியாழன் (28—1—54) ★ ★ ★ வெளியூர்: தைமீ 16உ வெள்ளி (29—1—54)

பிரிவினை முரசு எழுப்பும் பேரொலி

—(:)—

"கலகலப்பாகக் கூடிய கல்யாணி காங்கிரஸ் 'கலாட்டா'வோடு முடிந்ததேன்?"

"டில்லியின் செல்லப் பிள்ளையாக சி. ஆர். இருப்பதின் மர்மம் யாது?"

தமிழ்நாட்டு அரசியல் விநோதங்களை வெட்ட வெளிச்சமாக்குகிறார் சம்பத்

குளித்தலை, ஜன. 28—

"நாங்கள் திராவிட நாடு கேட்பது குறுகிய மனப்பான்மை என்று கூறும் காங்கிரஸ்காரர்கள், 'கல்யாணி காங்கிரசை'க் கவனிக்கட்டும். அது எவ்வாறு கலகலப்பாகக் கூடி கலாட்டாவோடு முடிந்தது என்றும், அங்கு ஒவ்வொருவரும் தனி மாகாணம் கேட்டது பற்றியும், இதுவரையில் கேள்விப்படாத மாகாணங்கள்கூட தனி நாடு கேட்பதையும் காங்கிரஸ்காரர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களைச் சிந்திக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று, குளித்தலையில் தி. மா. மு கழகத் துவக்க விழாவில் சொற்பொழிவாற்றுகையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

27—1—54 செவ்வாயன்று மாலை 6-30 மணிக்கு தோழர் ச. எழிலன் தலைமையில் தி மா மு. கழக துவக்க விழா நடைபெற்றது. அதுபோது, தோழர் ச. எழிலன் அவர்கள், தி. மா மு. கழகம் தோற்றுவிக்கப்படுவதின் அவசியத்தையும், அதன் குறிக்கோளையும் பற்றி சொற்பொழிவாற்றினர்.

பின்னர், தோழர் ஈ. வெ. கி சம்பத் சொற்பொழிவாற்றினர் அதுபோது அவர் கூறியதாவது:—

"இப்பொழுது தமிழ் நாடெங்கும் தி மா மு கழகம் ஆங்காங்கே ஏற்பட்டு வருகிறது. ஆனால், சிலர் நாங்கள் மாணவர்களைக் கெட்ட வழியில் அழைத்துச் செல்கிறோம் என்றும், மாணவர்கள் எங்களது அழகான சொற்பொழிவைக் கேட்டு எங்களது கழகத்தில் வந்து சேர்கிறார்களென்றும் சிலர் கூறுகிறார்கள். இதைவிட அறியாமை வேறென்றும் இருக்க முடியாதென்று கூற ஆசைப்படுகிறேன்.

மேலும் அவர் கூறியதாவது:—

"இயக்கங்களில் சில, அரசியலைச் சீர்படுத்தினால் நாட்டின் நிலைமை சரியாகிவிடுமென்றும், கம்யூனிஸ்டு போன்ற கட்சியினர் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கி இந்நாட்டை தொழிலாளர்களுக்கே ஆக்க வேண்டும் எனக் கூறிவருகின்றனர். ஆனால், இதுபோல், அகில இந்திய கட்சி என்று கூறி வரும் இயக்கங்கள் அத்தனைக்கும் தலைவர்கள் வடநாட்டில் தான்!

"தமிழ் நாட்டில் அரசியலில் சில காலமாக நிகழ்ந்து வரும் அதிசயங்கள் எந்த நாட்டிலும் கிடையாது எவர்களாகவோ, மந்திரிகளாகவோ ஆவதற்கு தேர்தலிலே தோற்க வேண்டும். உதாரணமாக தேர்தலிலே தோற்ற பக்தவத்சலம் மந்திரியாகவும், தோற்ற குமாரசாமி ராஜா கவர்னராகவும், இதுபோல் சந்தானமய்யங்காரும், இன்னும் சிலரும் இருக்கிறார்கள்.

"ஆச்சாரியாரை, ஏன் டில்லி விட மறுக்கிறதென்றால், அவர் காட்டிக் கொடுப்பதில் கைதேர்ந்தவராகவும், வாதத்தை தாங்கும் பக்தராக இருப்பதுமேயாகும்."

கூட்ட முடிவில் அத்துக்குடி தோழர் அப்பாசாமி அவர்களால், 'மந்திரமா, தந்திரமா?' என்ற நிகழ்ச்சியில் சில பகுதிகள் நடத்திக் காண்பிக்கப்பட்டது.

கோயிலுக்குள் நுழைந்த அரிஜனங்கள் கைது

காட்மண்டு, ஜன. 27—

இங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள புகழ்பெற்ற இமாலய பசுபதிநாதர் ஆலயத்திலுள் நுழைய முயற்சித்ததாக, ஒன்பது தாழ்த்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கோவிலின் வாயில்முன் நின்றுகொண்டு, 'நாங்கள் கோவிலுக்குள் செல்லவேண்டும்' என்று கூறியதாக, போலீசார் தெரிவித்தனர்.

நேபாள சட்டப்படி அரிஜன்கள் கோவிலுக்குள் நுழைய முடியாது.

தானியம் விளையுமிடத்தில் புல் முளைக்கிறது!

—[o]—

வறுமையினால் நேரிடும் விபரீதம் — ஆச்சார்யா வினோபாபாவே எச்சரிக்கை!

பாட்னா, ஜன 28—

"தற்போது நாட்டில் முதலாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் மிடையே மனக் கசப்பு ஏற்பட்டு வருகிறது தானியம் விளையவேண்டிய இடங்களில் புல் விளைகிறது. இம்மாதிரியான குறைபாடுகளை அறவே ஒழிக்க நாம் உறுதிகொள்ள வேண்டும்," என்று, ஆச்சார்ய வினோபாவே, இங்கு நடைபெற்ற ஓர் வழிபாட்டுக் கூட்டத்தில் கூறினார்

தொடர்ந்து அவர் பேசினர்:-

"வறுமையே ஒரு மனிதனைத் திருடும்படி தூண்டுகிறது; திருட்டுக் குற்றம் செய்தவனுக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது; ஆனால், பணம் சேர்த்து வைப்பவனை நாம் கவுரவிக்கிறோம்."

"நிலமில்லாதோருக்கு நிலமளித்து, வேலையில்லாதோருக்கு வேலை அளித்து, நாட்டில் திருட்டுப் பயத்தை போக்கவேண்டும்," என்று அவர் கேட்டுக்கொண்டார்.

குடியரசு தின ஊர்வல எதிரொலி!

—o—

கட்சிகளுக்குள் மோதல்! பலருக்குப் பலத்த காயம்!

உஜ்ஜயினி, ஜன. 27—

இங்கு நகரத்தின் மத்தியில், நேற்று, கம்யூனிஸ்டுகளுடைய மஜ்தூர் சபாவினருக்கும், தேசிய தொழிற் சங்கத்தின் நகர் கிளையினருக்குமிடையில் ஊர்வலமொன்றில் கைகலப்பு ஏற்பட்டது. அதன் விளைவாக, நான்கு பேர்களுக்குப் பலத்த காயமேற்பட்டது. மொத்தம் பதினான்கு பேர்கள் காயமடைந்தனர் இருபிரிவினரும், குடியரசு தினத்தை யொட்டி ஊர்வலம் நடத்தினர்.

கலகத்தை யொட்டி ஆறு பேர்களைப் போலீசார் கைது செய்தனர்.

உஜ்ஜயினி மாவட்ட நிதிபதி பத்திரிகைக் குறிப்பொன்றில், கம்யூனிஸ்டுகள் ஊர்வலத்தில் காங்கிரசுக்கு எதிரான ஒலிகளை எழுப்பினரெனவும், அதை தேசிய தொழிற் சங்கத்தினர் தடுத்தனர் என்றும், அதுவே கைகலப்பிற்குக் காரணமென்றும் கூறியுள்ளார்.

தேசிய தொழிற் சங்கத்தின் தலைவரான ஹிராலால் சர்மா என்பவர் இன்று காலை சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது தாக்கப்பட்டார். அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளாரெனவும் அவர் நிலை மோசமாக உள்ளதென்றும் தெரிகிறது.

சென்னைக்கு அரிசி கொண்டுவர வசதி

—::—

எல்லாத் தடைகளும் நீக்கப்பட்டன

ரயில்வே அதிகாரிகளுக்கு உத்தரவு

சென்னை, ஜன. 28—

தஞ்சையிலிருந்து அரிசி கொண்டுவர இருந்த எல்லாத் தடைகளும் நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

இது சம்மந்தமாக ரயில்வே அதிகாரிகளுக்கு மண்டலத்து உத்தரவை அமுலாக்கும்படி தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வெளியூரிலிருந்து அரிசி சென்னைக்கு வருவது திடீரென்று நின்று விட்டதால் சென்னையில் பச்சரிசி விலை அதிகம் ஏறிவிட்டது. தஞ்சையிலிருந்து அரிசி ரயிலில் இனி வந்து விடுமாகையால் சென்னையில் அரிசி விலை குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டம்—ஏன்?

★

சென்னை பார்க்பேர் மைதானத்தில் (S.I.A.A. Grounds)

மாபெரும் பொதுக்கூட்டம்

30—1—1954 சனிக்கிழமை மாலை 4-மணிக்கு

கோவை ஜி. டி. நாயுடு

பேசுவார்

பொருள்: "இன்று நம் நாட்டுத் தொழில் நிலை"

இதர சொற்பொழிவாளர்கள்:

டாக்டர் பி. சுப்பராயன்

டாக்டர் பி. வரதராசுலு நாயுடு, M.L.A.

டாக்டர் வி. கே. ஜான், M.L.C.

திரு. ஆர். வி. சாமிநாதன், M.L.A.

திரு. காமராஜ், M.P.

திரு. ம. பொ. சிவஞானம், M.L.C.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, M.P.

திரு எஸ். ராமநாதன்

திரு. ஏ. கோவிந்தசாமி, M.L.A.

திரு. மோகன் குமாரமங்கலம்

கோவை திரு சி. அண்ணாத்துரை

திரு சி. என். அண்ணாதுரை

திரு எஸ். குருசாமி

திரு. எஸ். பி. ஆதித்தன்

பெரியார் ஈ. வெ. ரா.

—I.L.W.A. Ltd., Coimbatore.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—1—1954 வியாழன்

பேராசிரியர் பிரிந்தார்

அந்தோ! எண்ணும்பொழுதே குடல் நடுக்குறும் செய்தி! எழுதும்பொழுதே கருத்தைக் குழப்பும் செய்தி! இயற்கைக்குத் துளியும் இரக்கத்தைக் காணோம்! எத்தனையோ மாமிச மலைகளை, சோற்றாலடித்த பிண்டங்களை, மனித உருவில் உலாவிடும் பிள்ளைப் பெருக்கிகளை, 'சங்க மாட்டாளு - சங்கடந் தீராதா' என்று பிறர் தூற்றும் நாட்டுக்கு ஆகாத நயவஞ்சகர்களை, 'பதவி - பதவி' என்று அதிகார வெறி பிடித்து அலைந்து திரியும் ஆணவக்காரர்களை—மூப்பு எய்தியும் முடித்துவிடாது, அத்தகையவர்பால் கருணை காட்டிவரும் இயற்கை, உலகப் பேராசிரியர்களில் ஒருவரை, சகலகலாவல்லவரை, ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராக அமைந்த அறிஞரை, பல மொழியைக் கசடறக் கற்ற பன்மொழிப் புலவரை, கற்றதை நன்குணர்ந்து விளக்கந் தந்து கற்பவர் கருத்தோடு கலந்துவிட எழுதக் கற்றுள்ள ஊற்றெழுத்தாளரை நம்மை விட்டுப் பிரித்துக்கொண்டு போய் விட்டது! கொடுமை! கொடுமை! தாங்கொணா கொடுமை!

பார்ப்பனக் குடி பிறந்து, வைதீக வெறி துறந்து, உலக அறிஞர் வாழ்க்கை முறையெல்லாம் வகையாக உணர்ந்து, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக்கொண்டு வாழ்ந்த, தோழர் எம். என். ராய் அவர்களைப்போல் ஒருவரையும் நாம் சுட்டிக்காட்டுவதற்கில்லை.

ஆயிரத்தில் ஒருவர்—அப்படிக் குறிப்பிடுவது, அவர் கல்வியின் பரவலைக் குறைத்து மதிப்பிடுவதாகும்! லட்சத்தில் ஒருவராக அவரைக் கொள்ளலாம் என்றாலோ, அவர் அறிவாற்றலைத் திட்டவட்டமாகத் திட்டிக்காட்டினது ஆகாதே என்று நாம் அஞ்சுகிறோம். அவர் போன்றாரைக் கோடிக்கொருவராகக் கொள்ளுவதுதான், அவரை நாம் நன்கு அறிந்துகொண்டு இருக்கிறோம் என்பதற்கு அத்தாட்சியாகும்.

வங்காளத்தின் சிற்றூர் ஒன்றில் கோவில் பட்டாச்சாரி குடும்பத்தில் மனவேந்திர நாத் ராய், இற்றைக்குச் சரியாக 61 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். சிறு வயதில் பள்ளியில் பெற வேண்டிய முறையான கல்வியைப் பெறவில்லை. கோவில் மணியடித்துப் பயிற்சி பெற்றாரோ இல்லையோ அதை நாம் அறியோம். அவருடைய உடன் பிறந்தார் கோவில் பட்டாச்சாரியாக இருந்தார் என்பதை மட்டும் நாம் கேள்விப்பட்டு இருக்கிறோம். பட்டர் குடும்பத்திலே பிறந்தவர், மக்களை மடைமையில் ஆழ்த்தும் அக்கெட்ட வழி விட்டு, பாரைச் செம்மையாக்கும் பெரும் பணியில் புகுந்தது வியப்புக்குரியதேயாகும்.

ஒன்று இரண்டு வெள்ளை அதிகாரிகளைக் கொன்றுவிடுவதாலும், சில பல கொள்ளைகளை நடத்திவிடுவதாலும் பலம் பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை, இமை மூடித் திறக்குமுன், இந்தியத் துணைக் கண்டத்திலிருந்தே இல்லாமல் செய்துவிடலாம் என்று சிறமதி கொண்டு—ஆனால், அளவற்ற நம்பிக்கையோடும், நெஞ்சுரத்தோடும்—கொள்ளையிலும், கொலையிலும் புகுந்த வங்காள பயங்கரவாதிகளில் ஒருவராக பொது வாழ்வில் புகுந்த நரேந்திரநாத் பட்டாசாரியார் நாள் செல்லச் செல்ல, சிறந்த அறிவியல் ஆசானாக மாறியது பேராச்சரியமாகும்!

இளமையில் கற்காத ஒருவர், முதுமையில் மார்க்சின் தத்துவங்களுக்கு விளக்கம் கூறும் பேறும், அதனினும் மேல் நோக்கிச் செல்லும் பேறிவாற்றலும் பெற்றுத் திகழ்வதென்பது வெறும் கனவு என்றுதான், ராய் அவர்களை அறியாதவர் எவரும் கூற முந்துவர். ஆனால், ராயை நன்கு உணர்ந்துள்ளவர், அவ்வாறு கூற முன்வரார்.

ராய் அவர்கள் இருபது ஆண்டும் முற்றுப்பெறுவதற்குள்ளாகவே, பிரிட்டிஷ் இந்திய சர்க்காரின் கொடிய கரங்களில் சிக்காமல், கள்ளத்தனமாக வெளி நாடுகளுக்குச் சென்றுவிட்டார். இதிலிருந்தே அவர், பெயர் பெற்ற மர்ம மனிதராக மாறிவிட்டார்.

மெக்சிகோ சென்றார். ஒரு கம்யூனிஸ்டு கட்சியை உருவாக்கினார். இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற மனித சமுதாய விடுதலை வீரர் லெனின், ராய் அவர்களுக்கு அழைப்பு அனுப்பினார், உடனே ரஷ்யா வரவேண்டுமென்று! அவரும் அழைப்பை ஏற்று ரஷ்யா சென்றடைந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் அவதியுற்றுக்கிடந்த மக்கள் விமோசனம் பெறுவதற்கான மார்க்கம் காண லெனின் முயன்றார். அதில் வெற்றி பெறுவதற்கு ராயின் ஒத்துழைப்பை லெனின் நாடினார். கற்றாரைக் கற்றார் காமுறுவது நாடுவதில் இழிவொன்றுமில்லை.

எந்தக் காலனி மக்களின் பிரச்சினையில் முடிவு காண லெனினுக்கும், ராயுக்கும் நட்பேற்பட்டதோ, அதே பிரச்சினையின் காரணமாகத்தான் லெனின் மறைவுக்குப் பிறகு ஸ்டாலின் குழுவினருக்கும், ராயுக்கும் மனப் பிளவும், பின்னர் முறிவும் ஏற்பட்டுவிட்டது.

ராய், பெரியார் ராமசாமிக்கும் பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கும் நெருங்கிய நண்பராவார். இரு தலைவர்களையும் ராய் நன்கு மதித்து நேசித்தார். அந்தப் பேராசிரியர் இன்று நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவர் தந்த அறிவுக் கருவூலங்களைக்கொண்டுதான் நாம் இனி ஆறுதல் பெற முடியும். ராயின் பிரிவு பகுத்தறிவு உலகிற்குப் பெரு நஷ்டமாகும். அவர் பிரிவால் வாடிகிடக்கும் அவருடைய இல்லக்கிழத்தியார் எலன் ராய் அவர்களுக்கும், அவருடைய நண்பர் குழாத்தினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்! வாழ்க அவர் கொள்கைகள்!

ஆங்கிலமே தேவை என பம்பாய் சர்க்காருக்கு மனு

—— (:) ——

அங்குள்ள பிற மாநிலத்தவர் கோருகின்றனர்

ஆமதாபாத், ஜன. 25—

"ஆங்கிலோ - இந்திய சிறுவர்களுக்கும், மற்ற ஆசியரல்லாத சந்ததியினருக்கும் பாடங்களை ஆங்கிலத்தில் போதிப்பதுபோலவே, எல்லா மாநிலங்களிலும் ஆங்கில மொழிக்குப் பதிலாக பொது மொழியான இந்தி இடம் பெறும்வரையில், தங்களுடைய சிறுவர்களுக்கும் ஆங்கிலத்தின் மூலமாகவே பள்ளிகளில் பாடங்களைப் போதிக்க வேண்டும்."

—இந்தக் கருத்துடைய மனுவொன்று, பம்பாயில் குடியேறியுள்ள பிற மாநிலத்தவர் அனைவரின் சார்பிலும், பம்பாய் சர்க்காரிடம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

தென்னிந்திய சங்கம், வங்காள சங்கம், கோவா சங்கம், கன்னட சங்கம் ஆகிய நான்கு சங்கங்களின் ஒருமித்த கூட்டத்தில் ஒருமனப்பட்ட கோரிக்கையாகும் இது.

பம்பாயில் வழங்கும் வட்டார மொழிகள் எதையும் தாய் மொழியாகக் கொள்ளாத, அங்குள்ளவர் தொகை, அம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 3 சதவிகிதத்தினர் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

வங்காளிகள், தமிழர், ஆந்திரர், மலையாளிகள், கன்னடர், பஞ்சாபியர், கோவா மக்கள் முதலியோர் இப்பட்டியலில் அடங்கி உள்ளனர்.

தாங்கள் பிறந்த ஊர்களில் குழந்தைகளின் கல்விக்காக ஒரு குடும்பமும், தொழில் செய்யும் இடத்தில் ஒரு குடும்பமும் ஆக இரண்டு குடும்பங்களை ஒரே காலத்தில், சில பணக்காரர்களைப் போல் ஏற்படுத்திக் கொள்ள தங்களுடைய செல்வநிலை இடங்கொடுக்காது என்றும், அந்த மனுவில் விளக்கப் பட்டு இருக்கிறது.

குடிசைத்தொழில் ரீதியில் பென்சில் தயாரிப்பு

—0—

75 ரூபாயில் தயாரிப்புக் கருவி

புதுடெல்லி, ஜன. 27—

இந்தியாவில் பென்சில் தயாரிப்பதற்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகிற "ஜூனிப்பர்" மரத் துண்டுகளுக்குப் பதிலாக உள்நாட்டு மரங்களை உபயோகிப்பது பற்றி டேராடூன் வன ஆராய்ச்சி நிலையம் நடத்திய ஆராய்ச்சிகளின் பலனாக இப்போது இந்தியத் தேவதாரு மரக் கட்டைகளை இதற்கு ஏற்றபடி பக்குவம் செய்யும் ஒரு முறையை அது உருவாக்கியிருக்கிறது.

அவ்வாறு பக்குவம் செய்யப்பட்ட மரத் துண்டுகளை இந்தியாவிலுள்ள பல பென்சில் தயாரிப்பு நிலையங்கள் உபயோகித்துப் பார்த்து, அவை கிழக்காப்பிரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் ஜூனிப்பருக்குச் சமமானதாக இருக்கிறதென்று சிலாகித்திருக்கின்றன.

இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட தேவதாரு மரத்தைப் பென்சில் தயாரிப்புத் தொழிற்சாலைகள் அதிக அளவில் உபயோகித்து வருகையில், பென்சில் தயாரிப்பை ஒரு குடிசைத் தொழிலாக அபிவிருத்தி செய்வதற்கும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. தேசம் முழுவதிலும் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடைந்து வரும் இக்கட்டத்தில், பென்சில் தயாரிப்பைக் குடிசைத் தொழிலாக விருத்திசெய்வதற்கு முக்கியத்துவம் அதிகரிக்கிறது. மேலும் அது குடிசைத் தொழிலாக அமைவதால், கிராம மக்களுக்கு, விவசாய வேலையில்லாத காலங்களில் ஒரு மாற்று வேலையும் கிடைக்க வழி ஏற்படும்.

குடிசைத் தொழில் ரீதியில் பென்சில் தயாரிப்பதற்கு வன ஆராய்ச்சி நிலையம் சுமார் 75 ரூபாய் விலையில் ஒரு சுலபமான கருவியைத் தயாரித்திருக்கிறது. அதை சாதாரண மக்கள் அதிகப் பயிற்சி யில்லாமலேயே கையாள முடியும். இந்தக் கருவியும், பென்சில் கட்டைகளும், கரி முனைகளும் (லெட்) இருந்தால், பென்சில்களைத் தயாரித்து விடலாம். இதற்கான கட்டைகளும், கரி முனைகளும் (லெட்) இந்தியாவில் ஏராளமாகத் தயாராகின்றன.

சித்தூர் மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை

——(:)——

ஆந்திர சர்க்காரின் தீவிரம்

கர்னூல், ஜன. 25—

ஆந்திர மாநிலத்தில் உள்ள சித்தூர் மாவட்டத்தில் புதிதாக ஒரு ஆலையைத் திறப்பதற்காக ஆந்திர சர்க்கார் தீவிரமாக யோசித்து வருகிறது.

சர்க்காரும், கரும்பு உற்பத்தியாளர்களும் கூட்டாக ஒன்று சேர்ந்தோ அல்லது கரும்பு பயிரிடுவோர் மட்டுமே ஒன்று சேர்ந்தோ கூட்டுறவு முறையில் அந்த ஆலை தொடங்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

கூட்டுறவு முறையில் புதிய ஆலை இயங்குமானால், ஆலை முதலாளியின் சுரண்டல் பயத்துக்கு ஒரு துளியும் இடமிருக்காது என்று ஆந்திர சர்க்கார் தொழில் வளர்ச்சி மந்திரியான சஞ்சிவய்யா அறிவித்தார்.

சித்தூரிலும் இணைந்துள்ள இரண்டு தாலுகாக்களிலும் ஆண்டு ஒன்றுக்கு இப்பொழுது மொத்தம் ஒரு லட்சம் டன் கரும்பு சாகுபடி செய்வதாகவும், 30,000 ஏகரா விஸ்தீரணத்தில் கரும்பு பயிராவதாகவும் கணக்கிடப்பட்டு இருக்கிறது.

ரயில்வே பிரயாணிகளின் சௌகரிய வசதிகளுக்காக, சுதந்திரம் பெற்ற முதல் இரண்டு ஆண்டுகளில் 95 லட்சம் ரூபாய்க்கும் குறைவாகவே பணம் செலவிடப்பட்டது; ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் 5 மடங்கு செலவாயிற்று

பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கு உணவுத் தானியம்

புதுடில்லி, ஜன. 27—

மத்திய உணவு—விவசாய மந்திரி காரியாலயம், ஜனவரி 15-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில், நாட்டிலுள்ள பல்வேறு பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கு மொத்தம் 49,900 டன் உணவுத் தானியங்கள் அனுப்பியிருக்கின்றன.

இதில் பிரதானமாக, பம்பாய்க்கு 17,250 டன்னும், மேற்கு வங்காளத்துக்கு 7,550 டன்னும், திருவாங்கூர்-கொச்சிக்கு 6 550 டன்னும், சென்னைக்கு 3,100 டன்னும் கிடைத்தன. இதர எல்லாப் பிரதேசங்களுக்கும் மொத்தம் 15,450டன் கிடைத்தது.

அமெரிக்கரின் தமிழ் இசைக் கச்சேரி

தஞ்சை, ஜன. 24—

அமெரிக்காவிலிருந்து வந்து தஞ்சை இசைக் கல்லூரியில் கர்னாடக சங்கீதம் பயிலும் அமெரிக்க மாணவர் தியாகர் விழாவில் இசை கச்சேரி நடத்தினார். 'ஈவசுதா' என்னும் 'சகானா' கிருதியுடன் கச்சேரி ஆரம்பமாயிற்று. அவர் மிக அழகாகப் பாடியதாகச்சொல்லப்படுகிறது.

பங்களூரிலுள்ள, இந்திய டெலிபோன் உற்பத்திச் சாலையில், 1953-ம் ஆண்டில், மொத்தம் 40,000 டெலிபோன்கள் உற்பத்தி செய்யப்பட்டன; அதற்கு முந்திய ஆண்டில் 25,000 டெலிபோன்கள் உற்பத்தியாயின.

லால்குடியில் பொதுக்கூட்டம்

22—1—54 மாலை 6 மணிக்கு லால்குடி சிவன் கோவில் முன்பு திரு. வி. க. மன்ற சார்பில், தோழர் ப. அரங்கசாமி தலைமையில், தமிழர் திருநாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் திரு. வி. க. அவர்கள் சேவை பற்றிப் பேசினார். தோழர்கள் கண்ணதாசன், பாரதிதாசன் ஆகியோர் தமிழர் திருநாள் பெருமை பற்றிப் பேசினர்.

இடைவிடாமல் சைகிள் சவாரி

பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளி திடலில் 22—1—54 பிற்பகல் 3-30 மணிக்கு இடைவிடாமல் சைக்கிள் சவாரி பந்தயம் நடைபெற்றது. 14 தோழர்கள் கலந்துகொண்டனர்; தோழர்கள் இராமசாமி 68 மணி நேரமும், இராதாகிருஷ்ணன் 66 மணி நேரமும், சாரங்கம் 62 மணி நேரமும் சவாரி செய்து வெற்றி பெற்றனர். (ந. தி.)

கம்பம் நகர் பொதுநலச் சங்கம்

கம்பம், ஜன. 27—

22—1—54 மாலை 5 மணிக்கு யாதவர் பொது மடத்தில் சங்க அமைப்புக் கூட்டம் தோழர் இ. வெ. இராமசாமித்தேவர் தலைமையில் நடைபெற்றது. பல் நிலையத்தை மாற்றுதிருக்க வேண்டியதன் அவசியம் பற்றி தோழர்கள் ஓ. இராமசாமி, ஆர். டி. கணபதி, கா. முத்து வீரப்பன், எம். சிக்கந்தர், வா. அப்துல்லதீப், சிக்கையன் ஆகியோர் பேசினர்; 30 பேர் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது.

குடியிருப்பு வசதி: பிரிட்டனைச் சார்ந்த நாடுகள் கையாளும் முறைகள்

"குடியிருப்பு வசதி இப்போது சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டது; இந்த நெருக்கடி உலக அமைதிக்கே பங்கம் விளைவிக்கக்கூடுமோ," என்று அஞ்சுகிறார், இந்தியாவின் உதவி ஜனாதிபதி. வீட்டு நெருக்கடியைப் பிரதானப் பிரச்சினையாகக் கருதும் பிரிட்டனில், மலிவான வீடுகளைக் கட்ட என்ன என்ன செய்கிறார்கள், பிரிட்டனைச் சார்ந்த நாடுகளில் என்ன என்ன செய்கிறார்கள் என்பது கீழே தரப்படுகிறது.

சென்ற யுத்தத்திற்குப் பிறகு, பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நாடுகளில் 'தொழில் விழிப்பு' ஏற்பட்டதால், கிராம மக்கள் நகரங்களில் குடியேறலாயினர். இதனால், வீட்டு நெருக்கடி ஏற்பட்டதுடன், நகர அமைப்பு, குடியிருப்பு வசதி இவற்றைக் கவனிக்க ஒரு தனி இலாக்காவும், கிராம முன்னேற்றத்திற்காக ஓர் இலாக்காவும் ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படலாயிற்று.

இந்தப் பிரச்சினையைக் கவனிக்க லண்டனிலுள்ள காலனி மந்திரி காரியாலயத்திலும் தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது.

உஷ்ணப் பிரதேசங்களில் நாட்டுக்கு நாடு தட்பவெப்ப நிலை மாறுதலும், மக்களின் பொருளாதார நிலையில் வித்தியாசமும் இருப்பதால் எல்லா நாடுகளுக்கும் பொதுவான கட்டிட நிர்மாண நிர்ணய விதிகளைச் செய்ய முடியவில்லை.

வெட்பதட்ப நிலை, வெயில், காற்று இவற்றைக் கவனித்து கூரை, ஜன்னல் வசதி, தனம், தளவாடச் சாமான் இவை நிர்ணயிக்கப்படுகிறது. கூடிய மட்டில், பரம்பரையாக உள்ளூரில் உபயோகித்துவரும் தளவாடச் சாமான்களையும், உபயோகத்தையும் கவனித்து அபிவிருத்தி செய்யப்படுகிறது.

ஆப்பிரிக்காவில் மண் வீடு நிர்மாணத்தில், இயந்திர உதவியினால் கெட்டிக்கப்பட்ட மண்ணும், சிமிட்டியும் உபயோகப்படுகிறது. கூரை வேய்வதிலும் நவீன முறைகள் கையாளப்படுகின்றன. பல இடங்களில் செங்கல், ஓடு, காங்கிரீட் இவற்றின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பழைய முறைகளுடன் நவீன முறைகளைக் கலந்து கையாளுவது வெற்றிகரமாக இருக்கிறது. ஜான்சிபாரில், 600 சதுர அடி உள் பரப்பும் தனி சமையலறை, கக்கூசும் கொண்ட வீடுகளை நூறு பவுன் செலவில் கட்டுவது சாத்தியமாயிற்று. சர்க்கார் மாதிரி இலாகா தயாரித்த காங்கிரீட் தூண்களும், அந்த வட்டாரத்தில் கிடைக்கும் மர வாரைகளும், விட்டமும், கூரையும் உபயோகித்ததுடன் தளத்திற்குக் கல்லும், சுண்ணாம்பும் போடப்பட்டது.

பல நாடுகளில் மலிவான வீடுகள் கட்டும் பொறுப்பை சர்க்காரே ஏற்றுக் கொண்டுள்ளது. சில நாடுகளில் சர்க்கார் ஆதரவு பெற்ற தனி ஸ்தாபனங்கள் உண்டு.

தனி ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில், செலவில் சிக்கனமும், சாக்கு சுபமும் ஏற்படுகிறது; ஆனால் பூர்வாங்க வேலைகளையும் நிர்ணய விதிகளையும் சர்க்கார் செய்துவிடுவதே நலம்.

ஆனாலும் சர்க்காருக்கு வேறு சில பொறுப்புகள் உண்டு. நகர அமைப்பு, சுகாதாரம், கட்டிட நிர்மாணம் இவற்றுக்கான நிர்ணய விதிகளைச் செய்தல், சிப்பந்திகளுக்கு குடியிருப்பு வசதி செய்தல், குடியிருப்புக்கான இடங்களைத் தேர்ந்தெடுத்து ரோடு முதலிய வசதிகளைச் செய்தல், சிப்பந்திகளுக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்து தரும்படி பெரிய ஸ்தாபனங்களை வற்புறுத்தல், வீடு கட்டுகிறவர்களுக்கு கடன் வசதியும், தொழிற்துறை உதவியும் அளித்தல் ஆகியவை சர்க்காரின் வேலைகளே. இந்தத் துறையில்தான் காலனிகளில் கவனம் செலுத்தப்படுகிறது.

★

வீட்டு வசதியில் சாதாரண மக்களின் தேவை கவனிக்கப்படவே இல்லை!

இந்தியக் குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டுகிறார்!

"ஆதியில் மர நிழலிலும், குகைகளின் பாதுகாப்பிலும் வாழ்ந்த மனிதன், தன் தேவையும், திறமையும் பெருகியதற்கேற்ப, 'எகிப்தியப் 'பிரமிட்'கள் போன்ற பிரம்மாண்டமான கட்டட வேலைகளைச் செய்துவிட்டான்; ஆனால், சரித்திர வரலாற்றுக் காலமான இந்தப் பல்லாயிர ஆண்டுகளிலும் மனிதன் எத்தனையோ வகையான கட்டடங்களைக் கட்டத் தெரிந்துகொண்டாலும், சாமானிய மக்களின் தேவை நன்கு கவனிக்கப்படவேயில்லை. ஜனநாயக சகாப்தத்தில் வாழும் நமக்குத்தான் அதில் அக்கறை காட்டுகிற பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. 'வீடுகள் விஷயத்தில் உபயோக அம்சம்தான் முதலில் கவனிக்கப்பட வேண்டும்; அழகும் கவர்ச்சியும் அடுத்தபடிதான்; ஆனால், இரண்டும் ஒருங்கே அமையுமானால் அது மிகவும் நல்லது,' என்று பேக்கன் கூறினார். நாம் அந்த இரண்டு அம்சங்களையும் ஒருசேர அமைக்க வேண்டும்.

இப்போது எல்லா நாடுகளிலுமே ஏராளமான வீடுகளைக் கட்டி, அதிகரித்து வருகிற தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசரப் பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. வீட்டு வசதி மனிதனுக்கு இன்றியமையாத அடிப்படை வசதியாகும். ஏராளமான அளவில் வீடுகளைக் கட்டினால்தான் தேவையை ஓரளவுக்காவது சமாளிக்க முடியும். சாதாரண மனிதனுக்குக் கட்டுபடியாகக்கூடிய ரீதியில் வீட்டு வேலைச் செலவும், சாதன விலைகளும் குறைக்கப்பட்டால்தான் அது சாத்தியமாகும்.

இந்தியாவில் கிராமங்களில்தான் பெரும்பான்மை மக்கள் வசிக்கிறார்கள். எனவே, கிராம மக்களுக்கு ஏற்றபடி வீடுகளை உருவாக்காவிட்டால் நம் தேச மக்களுக்கு வீடுகளை அளித்தரும் முயற்சியில் வெற்றிபெற முடியாது. கிராமங்களைத் திருத்தியமைப்பதற்கு திட்டம் வகுத்து, கிராமங்களிலேயே கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு, கிராம மக்களின் சுய முயற்சியாலேயே, அவர்கள் பொறுப்பேற்கக்கூடிய செலவில் வீடுகளைக் கட்டுவது எப்படி என்பதைச் செய்து காட்டிவிட்டால், நம் முயற்சி வெற்றி பெற்றுவிட்டது என்று கூறலாம்.

—ராசேந்திர பிரசாத்.

இந்தியாவில் வீட்டு வசதிப் பிரச்னை

திட்டக் கமிஷன் முயற்சி வெற்றி பெறுமா?

இந்தியாவில், முக்கியமாக தொழில் நகரங்களில், வீட்டுவசதிப் பிரச்னை கடுமையாக இருந்து வருகிறது. நகரங்களில் பெரும்பான்மை மக்கள் நெருக்கடி நிறைந்த, அசுத்தமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். இந்நிலைமை பல ஆண்டு காலமாக நீடித்து வருகிறது. யுத்த காலத்திலும், அதற்கும் பிறகும் அது மிகவும் மோசமாகிவிட்டது. இதற்கு முக்கிய காரணம் சென்ற 30 ஆண்டு காலத்தில் மக்கள் தொகை சுமார் 44 சதவிகிதம் பெருகி இருப்பதும், நகரங்களிலும், நகர்ப் புறங்களிலும் வசிப்பவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கு அதிகமாகி இருப்பதும்தான். வேலை தேடி வரும் கிராமாந்திர மக்கள் நகரங்களில் குடியேறுவதும், பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானிலிருந்து சுமார் 80 லட்சம் பேர் அகதிகளாக வந்ததும் நகர மக்கள் தொகை பெருகுவதற்குக் காரணமாய் விட்டன.

இதுவரை வீடுகள் கட்டுவதற்கு ஆதாரமாயிருந்த தனி நபர்கள் முயற்சி மூலம் சமீப கால அபார தேவைகளை சமாளிக்க முடியவில்லை. பொருள்களின் பற்றுக் குறையும், கட்டட வேலைச் செலவு அதிகமாக இருப்பதும்—இவை யுத்த விளைவுகள்—தற்போதைய வீட்டு வசதிக் கட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணங்களாகும். வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுத் திட்டம், புதிய வீடுகள் கட்டப்படுவதைத் தடை செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

1950-ல் திட்டக் கமிஷன் ஏற்பட்டதும், இப்பிரச்சினை பரிசீலனைக்கு வந்தது. தற்போதைய அமோக கட்டடச் செலவு விகிதத்தில் ராஜ்ய சர்க்காரோ, முதலாளிகளோ பெரும் அளவுக்கு வெளியார் சகாயம் பெறாமல் அதிக அளவில் வீடு கட்டும் வேலையை மேற்கொள்ள முடியாது என்பது விளங்கிவிட்டது. கமிஷன் இப்பிரச்னையை நன்கு பரிசீலித்த பிறகு, இதற்காக மத்திய சர்க்கார், ஒரு மாநிலத்திற்கு, தொழிலாளர்களுக்கான வீடுகளைக் கட்டும் செலவில் 50 சத விகிதத்தைக் கடனாகவும், 50 சத விகிதத்தை சகாயத் தொகையாகவும் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்தது. கடனை 25 ஆண்டுகளில், ஆண்டுத் தவணைகளாகத் திருப்பித் தர வேண்டும்; சகாயத் தொகை 4,500 ரூபாய்க்கு மேற்படக் கூடாது—இது பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களிலுள்ள ஒரு "டெனமென்"டுக்கு அனுமதிக்கப்படலாம்; இதர நகரங்களில் ஒரு "டெனமென்"டுக்கு 2,700 ரூபாய் உச்ச வரம்பாகும்.

இப்போதைய திட்டம் ஆரம்ப முயற்சிதான்; வீட்டு வசதி அளிப்பதிலும், நிலைமையைச் சமாளிப்பதிலும் சர்க்காருக்குள்ள பொறுப்பை ஏற்கும் அடையாள பூர்வமான முயற்சிதான்.

5 ஆண்டுத் திட்டப்படி 85 கோடி ரூபாய் வீடுகள் கட்டுவதற்காக மத்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவது, குறைந்த சம்பள ஊழியர்களுக்கு வீடுகள் கட்டுவது, சேரிகளை ஒழிப்பது முதலியவைகளுக்கு பிரதானமாய் உபயோகிக்கப்படும். திட்டத்தில் கண்டுள்ள லட்சிய எல்லை மிகவும் குறைவு; போதிய அளவு இல்லை என்று கூறப்படலாம். ஆனால், எத்தனையோ காரியங்களுக்கு சர்க்கார் பணம் செலவிட அவசியமிருப்பதால், இந்த ஒரு விஷயத்துக்கு மாத்திரம் அதிகமாய்ச் செலவிடுவதற்கில்லை. எனவே, இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு சகல வழிகளையும் ஆராயவேண்டும். கட்டிடச் செலவைக் குறைப்பதற்கும், மலிவான வீடுகளைக் கட்டுவதற்கும் வழி கண்டுபிடித்தாலன்றி, குறைந்த ஊதிய பிரிவினருக்கு போதுமான அளவு வீடுகளைக் கட்டுவது சாத்தியமல்ல.

—குல்சாரிலால் நந்தா

கிராம மக்களின் வீட்டு வசதிகள்

பரம்பரைப் பழக்கத்தில் மாறுதல் வேண்டும்

தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பிரச்னையை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்றே சர்க்கார் கருதியது. நகரப் பிரதேசங்களில் வீட்டு வசதி நிலைமை கடுமையாக இருக்கிறது; எனவே, தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான சகாயத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

5 ஆண்டுத் திட்ட காலத்தில் 85 கோடி ரூபாய் செலவில் சர்க்கார் வீடு கட்டும் திட்டத்தை நடத்துவார்கள். இப்போதைய நிதி நிலையில், இது மிகக் கணிசமான தொகையாகும். சர்க்கார் இலாகாக்களுக்காகவும், சிப்பந்திகளுக்கும் வீடுகள் கட்டப்படும். அகதிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் வீடு கட்டுவதற்கு முதன்மை ஸ்தானம் அளிக்கப்படுகிறது.

நகர மக்கள் தொகை பெருகியதன் காரணமாக உள்ள தீய விளைவுகளைக் கவனிக்கும்போது, நகரங்கள் அளவுமீறி ஏற்பட்டுவிட்டன என்றோ, அல்லது அவை சமசீராக உருவாகவில்லை என்றோ எண்படுகிறது. நகரங்களின் முக்கியத்துவத்தை நாம் குறைத்துக் கூற முடியாது. ஆனால், நகரங்களில் சேரிகள் பெருகுவதைத் தடுத்து, ஏற்கெனவேயுள்ள சேரிகளை அகற்றி, அம்மக்களை நல்ல இடத்தில் குடியேற்ற வேண்டும்; பிரதேச ரீதியாய் நகரங்கள் உருவாகுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்; அதற்கு தேசிய ரீதியில் கொள்கை வகுக்கப்பட்டு நிறைவேற்றினால்தான் முடியும். நிதிதான் இதை நிர்ணயிக்கும் வரம்பு. சட்ட ரீதியிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரம்பரைப் பழக்கத்தால், குறிப்பிட்ட சில சாதனங்களையே உபயோகிப்பதும், குறிப்பிட்ட வேலை முறைகளையே கையாளுவதும் பழக்கத்தில் இருந்து வருகிறது. இதில் தீவிர மாறுதல் செய்வது சிரமம். ஆனால், இடையறாத ஆராய்ச்சி செய்து, கட்டடச் செலவைக் குறைத்தாக வேண்டும். இத்துறையில் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை ஒருமுகப்படுத்துவதற்காக சர்க்கார் தேசிய கட்டட ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கிராமாந்தர வீடுகள் விஷயத்தில் சுய உதவியுடன் கிராமவாசிகளுக்கு வீடு கட்ட வசதியளிப்பதே சிறந்த முறை. சமுதாய அபிவிருத்தித் திட்ட நிர்வாகம் இந்த கொள்கையை அனுசரித்து, அதன் நிதி வசதி அனுமதிக்கிற அளவுக்கு வீடு கட்ட உதவி செய்து வருகிறது. இதன் மூலம் மக்களும், சர்க்காரும் கூட்டாய்ச் சேர்ந்து வீடு கட்டுகிறார்கள். சர்க்கார், சாதனங்களை அளிப்பார்கள்—அவசியப்பட்டால் கடனுதவி தருவார்கள்; தொழில் நுட்ப ஆலோசனையையும் தெரிவிப்பார்கள். கட்டட வேலையை வீட்டுச் சொந்தக்காரரே செய்து கொள்ள வேண்டும். இது கிராமாந்தரங்களிலும், சேரிகளிலும் கையாளத்தக்க முறை.

—சர்தார் ஸ்வரண் சிங்

கோழைத்தனம்!

மன்னார்குடி, ஜன. 25—

அதிராமபட்டினம் ஆனைவிழுந்தான்குளம் கீழ்க்கரையில் 24-1-54-ல், ஏற்பட்ட கழகக் கொடியையும், மரத்தையும் அன்று கள்ளிரவில், சில கலகபதிகள் எடுத்துச் சென்றுவிட்டனர். இது சம்பந்தமாக போலீஸ் அதிகாரியிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. மீண்டும் 25—1—54-ல், இபக்கத் தோழர்களால் தோரண அலங்காரங்களுடன் பல இடங்களில் கொடி ஏற்றப்பட்டது.

தி. மு. கழகங்கள் துவக்கம்

★

ஆற்காடு (வ. ஆ. மாவட்டம்)

18—1—54-ல், தோப்புகானாவில் தோழர் த. பொன்னம்பலம் தலைமையில் தி. மு. கழகக் கிளை துவக்கி வைக்கப்பட்டது. அதுபோது, தோழர்கள் எ. டி. வேணுகோபாலன் செயலாளராகவும், க. வஜ்ரவேல் துணைச் செயலாளராகவும், ஆ. தங்கவேலனூர் பொருளாளராகவும், மற்றும் 19 பேர் கமிட்டி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்னிமங்கலம்

16—1—54-ல், இவ்வூரில் தி. மு. கழகம் நிறுவப்பட்டு, கீழ்க்கண்டவர்கள் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர் :- பி. கோவிந்தசாமி; துணைச்செயலாளர் :- பி. வெங்கடாசலம்; மாவட்டப் பிரதிநிதி: எ. கோவிந்தசாமி; பொருளாளர் :- கி. சோமசுந்தரம்; மற்றும் 21 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராசசிங்கமங்கலம் தி. மு. கழகம்

20—1—54-ல், செயற்குழுக் கூட்டம் தோழர் கீ. ம. சையது முகமது இல்லத்தில் கூடியது. அதுபோது, தோழர்கள் நவமார்க்கண்டேயன் செயலாளராகவும், கீ. மா. சையது முகமது துணைச் செயலாளராகவும், அ. சுப்பையா பொருளாளராகவும், வ. நாராயணன் விளம்பர உறுப்பினராகவும், நவமார்க்கண்டேயன் மாவட்டப் பிரதிநிதியாகவும், தோழர்கள் க. சீனிவாசன், க. மணிமொழியன், அ. சே. பிச்சை முகைபதீன், ப. சீனிமகமது, பி. முத்து, சுல்தான், மு. வசாப்பு ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேலச்சண்முகபுரம் தி. மு. கழகம்

சாத்தான்குடி, ஜன. 27—

24—1—54 காலை 10 மணியளவில் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் சு. பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் செ. அருணாசலம் செயலாளராகவும், நா. தேவஇரக்கம், ஆ. முக்கன் துணைச் செயலாளர்களாகவும், வ. குருசாமி பொருளாளராகவும், பெர. செம்புலிங்கம் விளம்பர உறுப்பினராகவும், மற்றும் பல தோழர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முகவரி மாற்றம்

மு. கருணாநிதி,
1/1, செக்கிரியா காலனி,
இரண்டாம் தெரு,
சென்னை-24.

ஐவர் மாநாட்டிற்கு மூவர் எதிர்ப்பு

தற்போது வேண்டாமென தட்டிக் கழிக்கிறார் அமெரிக்கப் பிரதிநிதி டல்லஸ்!

பெர்லின், ஜன. 27—

நான்கு வல்லரசு அயல் நாட்டு மந்திரிகள் மாநாட்டின் மூன்றாவது கூட்டம் இன்று காலை இந்திய நேரம் 6½ மணிக்கு ஆரம்பமாயிற்று.

கடந்த இரு கூட்டங்களில் நிகழ்ச்சி நிரல் பற்றிய சர்ச்சை நடந்தது. நேற்றைய கூட்டத்தில் மாலடோவின் நிகழ்ச்சி நிரல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

'அகில உலக பரபரப்பைத் தணிப்பதற்கான முயற்சிகள் எடுப்பதும், கம்யூனிஸ்டு சீனாவைச் சேர்த்து 5 வல்லரசுகள் மாநாடு நடத்துவதும்,' என்ற விஷயத்தின்மீது இன்று விவாதம் நடைபெற்றது.

இன்றைய கூட்டத்திற்கு பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி ஈடன் தலைமை வகித்தார்.

ஈடனின் கருத்திற்கிணங்க, சோவியத் அயல்நாட்டு மந்திரி மாலடோவ் இரண்டு நிமிஷங்கள் பேசினார். அவருக்குப் பின் அமெரிக்க அயல்நாட்டு மந்திரி டல்லஸ் பேசினார். கம்யூனிஸ்டு சீனாவைச் சேர்த்து ஐந்து வல்லரசு மாநாடு கூட்டுவது பற்றி மாலடோவ் கூறியதை டல்லஸ் எதிர்த்தார். ஜெர்மனி பற்றிய விவாதமே உடனடியாக தேவை என்றார். உலகம் எதிர்பார்க்கும் விஷயத்தை விட்டு விட்டு, புது மாநாடு பற்றி யோசிப்பது தவறென்றார்.

உலக விவகாரத்தை நடத்தும் உரிமைப் பாதுகாப்பு, அவையின் நிரந்தர உறுப்பினர்களுக்கு அளிக்கப்படவில்லை; ஆகவே, உலகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு ஐவருக்கு மட்டும் இருப்பதாக நினைப்பது கூடாது என்றும் அவர் சொன்னார்.

ஜெர்மனி, ஆஸ்திரியா பற்றிய விஷயத்தைப் பேச நால்வருக்குத்தான் உரிமையுண்டு என்றார்.

அதுபோலவே, கொரிய அரசியல் மாநாட்டில் செஞ்சீனாவுக்கு இடமுண்டு; இந்தோ—சீன பிரச்சினையில் செஞ்சீனாவுக்கு இடமுண்டு; ஆனால், இப்பிரச்சினைகளைத் தீர்க்க செஞ்சீனா தயாராக இருப்பதாகத் தெரியவில்லையென்றார் டல்லஸ்.

அவருக்குப் பின் பேசிய பிரான்ஸ் அயல் நாட்டு மந்திரி, டல்லஸ் பேசியதைத் தழுவிப் பேசினார்.

அதுபோலவே ஈடனும் சபையைக் கட்டிக் காட்டினார்.

கடைசியாக மாலடோவ் பேசுகையில், நேற்று இணக்கத்தின் சாயல் படிந்த டல்லஸின் பேச்சு இன்று மாறிவிட்டது; வேறு அரசியல் பிரச்சினை மட்டுமின்றி, பொருளாதார இராணுவப் பிரச்சினைகளையும் விவாதிப்பதே பெர்லின் மாநாட்டின் நோக்கமென்றார்.

பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி

பிரிட்டிஷ் நிதி மந்திரியின் கருத்து

புதுடெல்லி, ஜன. 27—

"பாகிஸ்தானுக்கு, அமெரிக்காவின் இராணுவ உதவி சிறிதளவு தற்காப்பு உதவியாக இருப்பின், அதை ஒரு ஒப்பந்தமாகக் கருத முடியாது; அதைப் பற்றிய முழு விபரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்,"

என்று பிரிட்டிஷ் நிதி மந்திரி பட்லர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இரு சுதந்திர நாடுகளுக்கிடையேயுள்ள விஷயத்தில் நாம் அதிகமாக சர்ச்சை செய்து கொள்ளக்கூடாது. இராணுவ உதவி பற்றிய சர்ச்சையை ஒரு வரம்புக்குட்படுத்த வேண்டும். மற்ற தேசங்களுக்குப் பொருளுதவி செய்வது அமெரிக்காவின் கொள்கை. அந்த உதவியின் ஒரு பகுதி, தற்காப்பு உதவியாக செய்யப்பட்டிருக்கிறதா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றார்.

ஆந்திரக் கைதிகள்

விடுவிக்க டில்லியின் அனுமதி

கர்னூல், ஜன. 27—

மத்திய சர்க்கார் சட்டங்களின் கீழ் தண்டிக்கப்பட்டு, ஆந்திர சிறைக்கூடங்களில் உள்ள கைதிகளை விடுதலை செய்வதற்கு மத்திய சர்க்கார் அனுமதியளித்து விட்டதாகத் தெரிகிறது. அவர்களில் 20 கம்யூனிஸ்டுகளிருப்பாரென்றும் சொல்லப்படுகிறது.

பம்பாயில் பெரும் தீ விபத்து

பம்பாய், ஜன. 27—

இன்றிரவு மஸ்ஜித்பந்தர் தெருவிலுள்ள ஒரு உலர்ந்த பழச் சேமிப்பு கிடங்கில் தீப்பிடித்துக் கொண்டது. கிடங்கு முற்றிலும் சாம்பலாகிப் போய்விட்டதாகத் தெரிகிறது. சுமார் 3 லட்ச ரூபாய்க்குமேல் பொருட்சேதம் ஏற்பட்டிருக்கலாமென கணிக்கப்படுகிறது.

டில்லியில் 'காஷ்மீர் பேச்சு'

புதுடெல்லி, ஜன. 27—

காஷ்மீர் பற்றி 1952 ஜூலையில் டெல்லியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பூரணமாக நிறைவேற்றுவது சம்பந்தமாக காஷ்மீர் மந்திரிகளுக்கும், இந்திய சர்க்காருக்கு மிடையே இன்று பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயிற்று.

கல்யாணி காங்கிரசிலிருந்து கலந்துகொண்டுவிட்டு திரும்பி வந்த காஷ்மீர் பிரதமர், நேருவுடன் பூர்வாங்க பேச்சு வார்த்தைகள் நடத்தியதாகத் தெரிகிறது.

பள்ளி இறுதி வகுப்பு பாடத்திட்டம்

சென்னை, ஜன. 27—

திருத்தப்பட்ட செகண்டரி கல்வித் திட்டம் (எஸ்.எஸ்.எல்.சி) சம்பந்தமாக 4-வது பாரம் முதல் 6-வது பாரம் வரையில் உள்ள பாடத் திட்டத்தின் விபரங்கள் இவ்வார கெஜட்டின் அனுபந்தத்தில் வெளியாயிருக்கிறது. அதாவது, அந்தந்தப் பகுதி மொழி அல்லது தாய் மொழியில்தான் பாடங்கள் போதிக்கப்படும். இவ்வாறு பாடத் திட்டங்கள் பற்றிய விவரங்களின் முடிவுரைகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

தூத்துக்குடியில் தி. மு. கழக பொதுக்கூட்டங்கள்

17—1—54 மாலை 6 மணிக்கு திருஞான சம்பந்தர் மடத்தின் பக்கம் நகர தி மு கழகத்தின் சார்பில், தோழர் கே. எம். ராஜன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் செல்லச் சங்கரலிங்கம், கே. தாளமுத்து, எம். ரத்தினம், ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

24—1—54 மாலை 6 மணிக்கு வ உ சி. மைதானத்தில் கீழச் சண்முகபுரம் தி. மு. கழக சார்பில் தோழர் எம். ரத்தினம் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரா இளம்வழுதி, எம்.ஏ., பி.எல்., மதுரை எஸ். முத்து, கே. எஸ். சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கழகக் கூட்டங்கள்

★

பழனி
(பொங்கல் விழா)

30—1—54 மாலை 6 மணிக்கு

தலைவர் :
கே.எஸ். லட்சுமிபதி, எம்.எல்.ஏ

பேசுபவர் :
மு. கருணாநிதி
எஸ். முத்து
பி சமதர்மம்

எம். பி. மங்கள கவுண்டர், எம்.எல்.ஏ., டி. என். செல்லப்பபிள்ளை, என். என். அப்பன், என். இராசகோபால், டி. வி. கே. இராமசாமி ஆகியோர் கலந்து கொள்வர். தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளுக்கு நிதி அளிக்கப்படும்.

★

பொன்னுச்சியூர்
(சமுத்தூர் அருகில்)
பகுத்தறிவு மன்றத் துவக்க விழா

30—1—54 சனி மாலை

பேசுபவர் :
எம். ஆர். கணேசன்

★

திருச்செந்தூர்

30—1—54 மாலை 7 மணிக்கு
இடம் : வ. உ. சி. திடல்

தலைவர் :
சிங்கை-எஸ். கந்தசாமி

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
எஸ் எஸ். சிவசூரியன்
அலிசேக் மன்சூர்

★

திண்டுக்கல்

31—1—54 மாலை 6 மணிக்கு
இடம் : வ. உ. சி. திடல்

பேசுவோர் :
மு. கருணாநிதி
எம். எஸ். மணி

★

பரமக்குடி

31—1—54 மாலை 7 மணிக்கு
தலைவர் : பரமசிவம்

பேசுவோர் :
எஸ். முத்து
வசனப்பித்தன்

★

குலசேகரன் பட்டி

31—1—54 ஞாயிறு மாலை

பேசுபவர் :
எம். ஆர். கணேசன்

★

அம்மாப்பேட்டை

31—1—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : ப. கண்ணன்

பேசுவோர் :
வி. சிவப்பிரகாசம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
கே. ஏ. நடராசன்
சிற்றுளி-ஏ. சுப்பிரமணியம்
கே. ஏ. வேங்கடாசலம்
கே. எஸ். மணி

நேர்மையற்ற செயல்!

வேதாரணியம், ஜன. 28

21—1—54 காலை 6 மணிக்கு வேதாரணியம் மேல வீதியில் தி. மு. கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. ஆனால், அன்று இரவு 12 மணிக்கு சில கலகபதிகள் கொடியை மரத்துடன் அகற்றிவிட்டனர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை சுற்றுப் பயணம்

★

ஜன. 31: மாலை, மாயவரம் தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புக் கூட்டம்

பிப். 4: மாலை, ஆலந்தூர் பள்ளி நிதி நாடகம்

„ 5: மாலை, கோமளீசுவரன் பேட்டை தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

„ 7: மாலை வ.ஆ திருப்பத்தூர் தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புக் கூட்டம்

„ 21: மதுரை நகர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

„ 22: பட்டிவீரன் பட்டி மறைந்த மாவீரர் ஊ. பு. அ சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்

கோவை முத்தமிழ் விழா

கோவை கலைக் கல்லூரியில் நடைபெறும் முத்தமிழ் விழாவில், இரண்டாம் நாளாகிய 30—1—54 சனி அன்று மாலை தோழர் க. அன்பழகன் அவர்கள், 'தமிழிசை' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

பொன்மலைப்பட்டி தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தல்

29-1-54 மாலை 6 மணிக்கு, கழக காரியாலயத்தில், தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுசமயம் இரண்டாவது ஆண்டிக்கு நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். கழக உறுப்பினர் அனைவரும் வருமாறு செயலாளர் சி. எஸ் மணி அறிவிக்கிறார்.

சேலம் ஜில்லா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் யூனியன் முதல் மாநாடு

31—1—54 அன்று, அரூர் தாலூகாவிலுள்ள மொரப்பூர் டியில், தோழர் எஸ். பி. பூஞ்சோலை அவர்களுடைய சினிமாக் கொட்டகையில் நடைபெறும். தலைவர்: தோழர் எஸ். வி. சுந்தர வரதாச்சாரி; திறப்பாளர் : தோழர் கே. கே. நல்லதம்பி; பேசுவோர்: தோழர்கள் ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.சி., வி. ராமுண்ணி மேனன், கே. கே. நல்லதம்பி.

நிலக்கோட்டையில் நாடகம்

30—1—54 சனி இரவு 10 மணிக்கு, ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பக நிதிக்காக, தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில், அழகிரி அரங்கில், பி. எஸ். செல்வா, பி. எஸ். கலைதூதன் குழுவினர் நடிக்கும் 'தவறியவள்' என்னும் நாடகம் நடைபெறும்.

அன்று பகல் 2 மணிக்கு மேற்படி அரங்கில், நிலக்கோட்டை வட்டாரக் குழுக் கமிட்டி, தோழர் மு. கருணாநிதி தலைமையில் அமைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும்

தெரிந்து கொள்ளுங்கள்!

★

புதுடில்லி, ஜன. 27—

1 1952—53-ம் ஆண்டில், இந்தியாவில் உள்ள கைத்தறிகளில் 83 கோடி ரூபாய் விலை மதிப்புள்ள சுமார் 1167 கோடி கெஜம் துணி உற்பத்தி செய்யப்பட்டது.

2 ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், பெரிய பாசனத் திட்டங்கள் மூலமும், சிறிய பாசனத் திட்டங்கள் மூலமும், சுமார் 40 லட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதிகள் அளிக்கப்பட்டன.

3. ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், கரையோரப் போக்குவரத்துக் கப்பல் வசதி 77,000 டன் அதிகரித்தது. கரையோரப் போக்குவரத்தில் இந்தியக் கப்பல்களின் பங்கு 1950—51-ல் 80 சதவிகிதமாக இருந்துவந்தது. 1952—53-ல் நூறு சதவிகிதமாக அதிகரித்திருக்கிறது.

4 1952—53-ல், இந்தியாவில் உபயோகிக்கப்பட்ட சிகரெட்டுகளின் மொத்தப் பெறுமானம், தீர்வை உட்பட, சுமார் 35.5 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

குதிரைப் பந்தயச் செய்தி வெளியீடுகள்

தடைசெய்ய முடியாதென உயர்நீதி மன்றம் தீர்ப்பு

சென்னை, ஜன. 28—

குதிரைப் பந்தயக் குறிப்புகள், செய்திகள் கொண்ட வெளியீடுகளைத் தடை செய்யும் நகர போலீஸ் சட்டத்தின் 49 (ஏ) பிரிவு செல்லத் தக்கதல்ல என்று, சென்னை உயர்நீதி மன்றத்தில், பிரதம மாகாண மாஜிஸ்திரேட்டால் விதிக்கப்பட்ட தண்டனையையும், மூன்றாவது மாகாண மாஜிஸ்திரேட் முன் உள்ள ஒரு வழக்கு விசாரணையையும் ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின்மீது தீர்ப்பளிக்கையில் நீதிபதி பஷீர் அகமது சையத் தெரிவித்தார்.

3-வது மாகாண மாஜிஸ்திரேட் முன் உள்ள விசாரணையையும், பிரதம மாகாண மாஜிஸ்திரேட்டால் விதிக்கப்பட்ட தண்டனைகளையும் நீதிபதி ரத்து செய்தார்.

மணப்பாறை குமாரவேல் உடல் நிலை

கல்லக்குடி அறப் போராட்டத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்களுடன் ஆறு மாத சிறை தண்டனை அனுபவித்து வெளிவந்துள்ள மணப்பாறைத் தோழர் வி. என். குமாரவேலர், தற்போது இருமல் நோயால் பெரிதும் வேதனைக்குள்ளாக்கப் பட்டிருக்கிறார். அவருக்குச் சிகிச்சை செய்ய பொருளுதவி தேவை எனக் கருதப்படுவதால் தோழர் குமாரவேல் சிகிச்சைக்கு இயன்ற பொருளுதவி செய்வோர், மீ. சு. இளமுருகு. குமாரவேல் உதவி நிதிக் குழு, மணப்பாறை, என்ற முகவரிக்கு அனுப்பும்படி தோழர் இளமுருகு கேட்டுக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத் அக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.